2023 ஜனவரி 11]

அனைவராலும் பாராட்டப்பட்டதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். 2025 ஆம் ஆண்டுக்குள், தொடக்கப் பள்ளியில் பயிலும் அனைத்துக் குழந்தைகளும் புரிதலுடன் படிக்கவும், எண்கணிதத்தில் திறன் பெறுவதற்கும் 'எண்ணும் எழுத்தும்' திட்டமும் செயல்படுத்தப்படுகிறது.

27. அனைவருக்கும் தரமான கல்வி வழங்குவதன் மூலம் ஒவ்வொரு மாணவரையும் முழுமையான வளர்ச்சி அடையச் செய்வதே இந்த அரசின் முக்கியக் குறிக்கோளாகும். இந்த நோக்கத்தை எய்திட, அடுத்த ஐந்தாண்டுகளில் அரசுப் பள்ளிகளை நவீனப்படுத்தி கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக 'பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டம்' தொடங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் இத்திட்டத்திற்கு 1,430 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், 7,200 புதிய வகுப்பறைகள் 1,050 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

28. 45 ஆண்டுகளாக நடத்தப்பட்டு வரும் சென்னை புத்தகக் கண்காட்சியை உலகத்தரத்திற்கு இவ்வாண்டு உயர்த்தும் வகையில், முதன்முறையாக சென்னை பன்னாட்டு புத்தகக் கண்காட்சியை 16.01.2023 முதல் 18.01.2023 வரை நடத்த தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது. இதில் 25-க்கும் மேற்பட்ட நாடுகள் பங்கேற்க உள்ளன. தமிழ் பதிப்பாளர்களுக்கும், உலகளாவிய பதிப்பகத் துறைக்கும் இடையே, அறிவுப் பரிமாற்றம், பதிப்புரிமை பரிமாற்றம் ஆகியவற்றை ஊக்குவிப்பதே இந்த புத்தகக் கண்காட்சியின் நோக்கமாகும். "தாயெழில் தமிழை, எந்தன் தமிழரின் கவிதை தன்னை, ஆயிரம் மொழியிற் காணும் நாள் எந்நாளோ" என்ற பாவேந்தரின் கனவை நனவாக்கும் வகையில், தமிழ் இலக்கியத்திலுள்ள சிறந்த படைப்புகளை உலக மொழிகளிலும் பிற இந்திய மொழிகளிலும் மொழிபெயர்க்க ஒரு சிறப்பு நல்கையை (special grant) தமிழ்நாடு அரசு வழங்கும்.

29. தரமான உயர் கல்வியை வழங்கி, நாட்டின் வளர்ச்சிக்கு அத்தியாவசியமான ஆற்றல்மிக்க மனிதவளத்தை உருவாக்க இந்த அரசு முனைந்துள்ளது. அந்தவகையில், பெண்களின் உயர் கல்விக்கு வித்திடவே 'மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு புதுமைப் பெண் திட்டம்' என்ற முன்னோடித் திட்டத்தை இந்த அரசு தொடங்கியுள்ளது. நடப்புக் கல்வி

[2023 ஜனவரி 11

ஆண்டில், இத்திட்டத்தின்மூலம், அரசுப் பள்ளிகளில் ஆறு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை பயின்று, உயர்கல்வி பயிலும் 1,28,780 மாணவிகள் மாதம் ஆயிரம் ரூபாய் உதவித்தொகை பெற்று பயனடைந்து வருகின்றனர். இந்நிதியாண்டின் இறுதிக்குள், பயன்பெறும் மாணவியரின் எண்ணிக்கை 2 இலட்சத்திற்கும் மேல் உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன் விளைவாக, கடந்த ஆண்டைக் காட்டிலும், நடப்புக் கல்வியாண்டில், கல்லூரிகளில் அரசுப் பள்ளி மாணவியரின் சேர்க்கை கணிசமாக அதிகரித்துள்ளது.

30. தொழில் துறையின் தேவைகளை நிறைவு செய்வதற்காக, பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் புதிய பாடப்பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், வேலைவாய்ப்புகளை அதிகரிக்கும்வகையில் பெண்களுக்கு ஏற்ற பட்டயப் படிப்புகளையும் அரசு தொடங்கியுள்ளது. கட்டடம், இயந்திரப் பொறியியல் போன்றவற்றில் பட்டயப் படிப்புகள் நடப்புக் கல்வியாண்டில் தமிழ்வழியில் கற்பிக்கப்படுகின்றன.

31. நாட்டிலேயே முதன்முறையாக, பன்னாட்டு செஸ் ஒலிம்பியாட் போட்டியை இந்த அரசு வெற்றிகரமாக சென்னையில் நடத்தியது. 180-க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த, ஏறத்தாழ 1,800 விளையாட்டு வீரர்களும் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். இப்போட்டியை மாண்புமிகு பிரதமர் அவர்கள் தொடங்கிவைத்தார்கள். இப்போட்டிக்காக, தமிழ்நாடு அரசு மேற்கொண்ட சீரிய ஏற்பாடுகளை அனைவரும் வெகுவாகப் போற்றினர். உலகே வியக்கும்வகையில், மிகக் குறுகிய காலத்தில், இந்த பன்னாட்டுப் போட்டியைச் சிறப்பாக நடத்திக் காட்டிய தமிழ்நாடு அரசை நான் மனமாரப் பாராட்டுகிறேன்.

32. மாநிலம் முழுவதும் விளையாட்டுத் திறனை ஊக்குவித்திட 'முதலமைச்சர் கோப்பைக்கான' போட்டிகளை அரசு அறிவித்துள்ளது. இப்போட்டிகளில், பள்ளி கல்லூரி மாணவ மாணவியர், மாற்றுத்திறனாளிகள், அரசுப் பணியாளர்கள், பொதுமக்கள் என ஐந்து பிரிவுகளில், ஆண் பெண் இருபாலரும் பங்கேற்கும் வகையில், தடகளம், கால்பந்து, கபடி, சிலம்பம் உள்ளிட்ட பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் மாநிலமெங்கும் நடத்தப்பட உள்ளன.